**சகல மதிப்பீட்டுப் பரீட்சகர்களுக்குமான விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**மிக முக்கியம் :- கேட்கப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியாகப் பூரணப்படுத்தப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத, தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.**

**01. 2011.03.01ஆம் திகதியிடப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட 03(01) 2009ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.**

1.1 **பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்த தற்போது கல்வி அமைச்சின் கீழ் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.**

(அ) விண்ணப்பிக்கும் பாடத்திற்குரிய பட்டத்தினையோ டிப்ளோமா பயிற்சினையோ பெற்றிருப்பதோடு குறித்த பாடத்திற்குரிய பொருத்தமான நியமனம் பெற்ற ஆசிரியராயிருத்தல்

(ஆ) க.பொ.த (உயர் தரம்) (12,13 ஆம் தரங்களுக்கு) ஆசிரியராகக் கற்பித்தலில் ஈடுபடல் அல்லது க.பொ.த (உயர்தர)த் பாடத்துடன் குறித்த பாடத்துடன் தொடர்புடைய அதிகாரியாகக் கடமையில் ஈடுபடல்.

* விஞ்ஞான பாட ஆங்கிலமொழிக்குரிய, (73) ஆங்கில பாடத்திற்குரிய தகைமைகளைக் கொண்ட தேசிய பாடத்திட்டத்தினைக் கற்பிக்கின்ற, தனியார் பாடசாலைகளில், சர்வதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும் விண்ணப்பிக்க முடியும்.

1.2 இலக்கம் 10 ஐப் பூரணப்படுத்தும்போது விண்ணப்பிக்கும் பாடத்திற்குரிய பொருத்தமான தகுதிகளைக் குறிப்பிடுதல் அவசியமாகும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

1.3 விண்ணப்பப்படிவத்தின் 13 ஆம் 14ஆம் பந்திகளைப் பூரணப்படுத்தும்போது "ஆம்" (Yes) அல்லது "இல்லை" (No) என்பதனை உரிய கூட்டில் தெளிவாக குறிப்பிடுக. அவ்வாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

*** தற்போது உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் நடைபெறுமாயின் அல்லது நீங்கள் பரீட்சைக் கடமைகளில் ஈடுப்படுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருப்பின் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க முடியாது.**

1.4 **நீங்கள் அல்லது உங்கள் குடும்பத்து உறுப்பினர் ஒருவர் பரீட்சைக்கு தோற்றுவாராயின் உங்களால் விண்ணப்பிக்க முடியாது. குடும்ப உறுப்பினர் எனப்படுவோர் - தங்களின் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும், உங்களினதும் வாழ்க்கைதுணையினும் பெற்றோர் சகோதர சகோதரிகளும், அவர்களது பிள்ளைகளும், உங்கள் வசிப்பிடத்தில் தங்கியிருப்போரும்**

1.5 **இரண்டு பாடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் கீழே தரப்பட்டுள்ள பாடத் தொகுதிகளுக்கிடையில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.**

| | | | |
|---|---|---|---|
| (10) இணைந்த கணிதம் | (02) இரசாயணவியல் | (08) விவசாய விஞ்ஞானம் | (67) தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| (07) கணிதம் | (18) விவசாய தொழினுட்பம் | | (14) குடிசார் தொழினுட்பவியல் |
| (11) உயர் கணிதம் | (66) உயிர் முறைமைகள் தொழினுட்பவியல் | | (15) பொறிமுறைத் தொழினுட்பவியல் |
| (16) மின், இலத்திரன், தகவல் தொழினுட்பவியல் | | | |

1.6 சகல விண்ணப்பதாரிகளும் இவ்விண்ணப்பப்படிவத்தின் 16 ஆம் பந்தியைத் தவிர்ந்த ஏனையவற்றை நிகழ்நிலை (Online) முறையில் பூர்த்தி செய்து அதன் PDF பிரதியினை பதிவிறக்கம் (Download) செய்து அதிபரிடம் / நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்கவும். புதிய விண்ணப்பதாரிகள் குறித்த சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளோடு அதிபரிடம் / நிறுவனத் தலைவரிடம் வன்பிரதிகளை சான்றுப்படுத்தி இதனுடன் இணைக்கவும்.

1.7 விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலை (Online) முறையில் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். அரச பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலை முறையில் (Online) அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு நிகழ்நிலை முறையில் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும். புதிய விண்ணப்பதாரிகள் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் விண்ணப்பபடிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

1.8 மேற்படி பரீட்சையின் மதிப்பீட்டு நிலையங்கள் பின்வரும் இடங்களில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. (மதிப்பீட்டுக் காலம் சுமார் 14 நாட்களாக அமையும்)

| | | |
|---|---|---|
| **01 கொழும்பு** | **15 இரத்தினபுரி** | **35 அநுராதபுரம்** |
| **02 மஹரகம** | **20 பதுளை** | **38 கேகாலை** |
| **08 ஹொரண** | **25 காலி** | **41 கண்டி** |
| **10 களுத்துறை** | **27 மாத்தறை** | **50 மட்டக்களப்பு** |
| **12 நீர்கொழும்பு** | **30 குருநாகல்** | **51 வவுனியா** |
| **13 கம்பஹா** | **32 குளியாப்பிட்டி** | **53 யாழ்ப்பாணம்** |

குறிப்பு :* **போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத நகரங்களில் மதிப்பீட்டு நிலையங்கள் நிறுவப்படமாட்டாது. எனவே இரண்டாவது தெரிவையும் குறிப்பிட வேண்டும்.**

*** விடைத்தாள் மதிப்பீட்டுக் காலத்தின் போது பரீட்சைத் திணைக்களத்தினால் தங்குமிட வசதிகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் முற்கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.**

**02. விண்ணப்பப்படிவத்தினை உறுதிப்படுத்தல் :**

ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்கள் பாடசாலை அதிபராலும், வலயத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்கள் வலயக் கல்விப் பணிப்பாளராலும் கோட்டத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்கள் கோட்டக் கல்வி பணிப்பாளராலும் தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை ஆசிரியர்கள் நிறுவனத் தலைவர் ஊடாகவும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**03. விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் (அதிபர் / நிறுவனத் தலைவர்):**

3.1 விண்ணப்பதாரியால் இப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையா என்பதைப் பரிசீலிக்கவும்.

3.2 மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியென 3ஆம் பக்கத்திலுள்ள உரிய இடத்தில் கட்டாயமாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

3.3 மேலே இலக்கம். 16 (a) இல் (i) தொடக்கம் (iv) வரையான விவரங்களின் கீழ் விண்ணப்பதாரி பற்றிய உங்கள் கணிப்பை உரிய கூடுகளில், பின்வருவனவற்றுள் தகுந்த குறியீட்டால் அடையாளப்படுத்தவும்.

**A** - சிறப்பானது **B** - நன்று **C** - சாதாரணம் **W** – பலவீனம்

3.4 இது அந்தரங்க அறிக்கையாகும். சகல விண்ணப்படிவங்களும் உங்களால் நிகழ்நிலை முறையில் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவ்வாறே பதிவிறக்கம் செய்யப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட சகல விண்ணப்பப்படிவங்களையும் உறுதிப்படுத்திய பின்னர் கோவைப்படுத்தப்பட்டு (புதிய விண்ணப்பதாரிகளின் பெயர்கள் உரிய இணைப்புகளுடன்) உங்கள் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். அவ்வாறே புதிய, பாடசாலை ஆசிரியர்கள் அல்லாத விண்ணப்பதாரிகளின் இணைப்பையும் கொண்ட சகல விண்ணப்பதாரிகளினதும் விண்ணப்பப்படிவங்கள் (பழைய விண்ணப்பதாரிகளின் இணைப்பு இல்லாமல்) கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **‘ விடைத்தாள் பரீட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள், க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2024’** எனக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சகல விண்ணப்பப்படிவங்களையும் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2024.09.23 என்பதை கவனத்திற் கொள்க.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
(பாடசாலைப் பரீட்சைகள்) மதிப்பீட்டுக் கிளை.
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
த.பெ.இல. - 1503,
கொழும்பு.

**இணைப்பு**

ஒவ்வொரு கட்டத்திலும் மதிப்பீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ள பாடங்கள் பின்வருமாறு

**1st Stage**

| | |
|---|---|
| 1 | Physics (S/T/E) |
| 8 | Agricultural Science (S/T) |
| 9 | Biology (S/T/E) |
| 10 | Combined Mathematics (S/T) |
| 14 | Civil Technology |
| 15 | Mechanical Technology |
| 16 | Electrical, Electronic & Inf. Tec. |
| 17 | Food Technology |
| 18 | Agro Technology |
| 19 | Bio-Resource Technology |
| 21 | Economics |
| 24 | Logic & Scientific Method (S/T/E) |
| 28 | Home Economics |
| 31 | Business Statistics |
| 32 | Business Studies (S/T/E) |
| 41 | Buddhism (S/T/E) |
| 42 | Hinduism (S/T/E) |
| 43 | Christianity |
| 44 | Islam |
| 45 | Buddhist Civilization |
| 46 | Hindu Civilization |
| 47 | Islam Civilization (T) |
| 49 | Christian Civilization (S/T) |
| 51 | Art (S/T/E) |
| 52 | Dancing (Indigenous) (S) |
| 53 | Dancing (Bharatha) (S/T) |
| 54 | Oriental Music (S) |
| 55 | Carnatic Music |
| 56 | Western Music (X) |
| 57 | Drama & Theatre (S) |
| 58 | Drama & Theatre (T) |
| 59 | Drama & Theatre (E) |
| 65 | Engineering Technology (S/T) |
| 67 | Science for Technology |
| 71 | Sinhala (S) |
| 72 | Tamil |
| 73 | English |
| 74 | Pali |
| 75 | Sanskrit |
| 78 | Arabic |
| 82 | German |

**2nd Stage**

| | |
|---|---|
| 2 | Chemistry (S/T/E) |
| 7 | Mathematics (S/T/E) |
| 8 | Agricultural Science (E) |
| 10 | Combined Mathematics (E) |
| 11 | Higher Mathematics (S/T/E) |
| 13 | General English |
| 20 | Information & Communication T. (S/T/E) |
| 22 | Geography (S/T) |
| 23 | Political Science (S/T/E) |
| 25 | History of Sri Lanka (S/T/E) |
| 25 A | History of India (S/T/E) |
| 25 B | History of Europe (S/T/E) |
| 25 C | History of Modern World (S/T/E) |
| 29 | Communication & Media Stu. (S/T/E) |
| 33 | Accounting (S/T/E) |
| 48 | Greek & Roman Civilization |
| 66 | Bio Systems Technology |
| 79 | Malay (X) |
| 81 | French (X) |
| 83 | Russian (X) |
| 84 | Hindi (X) |
| 86 | Chinese (X) |
| 87 | Japanese (X) |
| 88 | Korean (X) |

- ❖ விண்ணப்படிவத்துடன் வன் பிரதியொன்றை அதிபரூடாக உறுதிப்படுத்தி பரீட்சை திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளைக்கு அனுப்ப வேண்டும்.

- ❖ பிரதான பாடத்துக்கு மேலதிகமாக இரண்டாம் பாடமொன்றுக்கு அல்லது வேறு மொழி மூல அடையாளத்தைப் மதிப்பிட எதிர்பார்பபுக்களின் அதற்காகவும் நீங்கள் பதிவிறக்கம் செய்த வன் பிரதியை நிழற்பிரதியெடுத்து அதில் இரண்டாம் மொழிமூலம் / இரண்டாம் பாடம் என்பதனை Highlight செய்து பரீட்சை திணைக்களத்துக்கு அனுப்ப வேண்டும்.

- ❖ இரண்டாம் கட்ட பாடங்களில் ஆங்கிலமொழிமூலம் விடைத்தாள் மதிப்பிடலுக்கு எதிர்பார்க்கப்படுவாராயின் விண்ணப்படிவத்தின் வன்பிரதியை அனுப்ப வேண்டும்.